மலர் இதழ்களின்
நிழலில்
கொஞ்ச நேரம்
தலை சாய்கிறேன்

★

சமாதிகள்
உயிர்த்தெழுகின்றன
மனிதர்களை மறந்து
பிரபஞ்ச நாயகனின் மடியில்
மடிந்து போகின்றேன்

பூஜ்யம்

மலானியாவின்

கவிதை தொகுப்பு

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு வெளியீடு 2016

பொன்விழா ஆய்வு மாநாடு 2016

இலங்கை

நூல் விபரம்

நூலின் பெயர் : பூஜ்யம்
ஆசிரியர் : மஸானி
மொழி : தமிழ்
பதிப்பு ஆண்டு : 2016
பதிப்புரிமை : மாஸானியாருக்கே
தாள் : வெள்ளை
நூல் வெளியீடு : முச்சுடர் முத்து முஹையத்தீன் ஆண்டகை
ஞானத்திருச்சபை அறக்கட்டளை
வாலை பக்கீர் மஸ்தான் வலியுல்லா தர்ஹா சரீப்
கமுதிரோடு, அபிராமம்.
நூல் அளவு : டெம்மி 1/8
புள்ளி : 12
பக்கம் :
பைண்டிங் : சாதாரண கட்டு
விலை : ரூ. 40.00
அச்சிட்டோர் : கிளாசிக் ஆப்செட், கடையநல்லூர்.

நூல் கிடைக்கும் இடம்

நாகூர் ஆண்டவர் பள்ளிவாசல்,
காதிரியா மெஞ்ஞானசபை அறக்கட்டளை
12/2, பண்பொழி ரோடு, கடையநல்லூர்.
செல் : 9842861541, 9487715739

டாக்டர். ஜலாலுத்தீன் கலீப்பத்துல் காதிரியா
முச்சுடர் முத்து முஹையத்தீன் ஆண்டகை
ஞானத்திருச்சபை அறக்கட்டளை
வாலை பக்கீர் மஸ்தான் வலியுல்லா தர்ஹா சரீப்
கமுதிரோடு, அபிராமம். செல் : 9442722539

மௌனத்திற்கு அப்பால் நின்று பேசு!
மனதிற்குள் இறைமை பேசு!

★

கருவின் வாசம் இறை விசவாசம்
கருவின் நேசம் மாக்கொடி பேசும்.

★

ஒரே ஒரு முறை
அந்த சூல்
அறையில்
என் நினைவை
இறைத்தேன்

★

அந்த கதகதப்பில்
ஒரு துளியை
இழந்தேன்

★

என் காலக்
கண்ணாடியில்
பாவ, புண்ணியம்
தொடர்ந்தது...

★

சரிந்து கிடப்பது
சண்டாளர்கள்
மட்டும் அல்ல
சரித்திர
நாயகர்களும் தான்

★

சமாதியில் கால் வைக்காதே
எல்லாச் சமாதிகளும்
ஒரு சன்னதி தான்

இல்லையேல்... இல்லாமல் போ!

இஸ்லாம் அன்பை நேசிக்கிறது
நாங்கள் உங்களை நேசிக்கிறோம்
பேதங்கள் அற்ற
பரிசுத்த நிலையில்
இந்தக் கப்பலில்
பயணித்துப் பார்ப்போமா....?

ஆன்மா பேசும் போது
மனம் மௌனம் ஆகின்றது
★
மனம் பேசும் போது
ஆன்மா மரணமாகின்றது.
★
விஞ்ஞானம் அனுமானம்
மெஞ்ஞானம் உண்மை.
★
வாதம் வேதனை
ஞானம் போதனை
★
கல்வி தேடிக் கற்பது
ஞானம் தேடிக் கிடைப்பது.
★
உறவு ஈரம் துறவு பாரம்
உறவு பானம் துறவு மௌனம்
உறவு துன்பம் துறவு இன்பம்
விதி விதைப்பது மதி அறுப்பது.
★
உன்னுள்ளே உன்னைத் தேடு
பிரபஞ்சத்தில் கூட்டலும் கழித்தலும்
பிரம்மத்தில் கூட்டல் மட்டும்

வாழ்த்துக் கவிதை

“ எக்கலை கற்ற போதும்
இயற்கலை ஞானம்.
மெஞ்ஞானம் கல்லார்
சிக்கலை எடுக்கவல்ல
சீப்பினைப் பெறாதார்
மாட்சிமைப்பெற்ற மஸானியாரின்
தனிக்கலை ஞானப்பாட்டு
மெஞ்ஞானப்பாட்டின் நற்
சொற்களை வெளிச்சமாக்கும்
சூரியன் இந்நூல் பூஜ்யம் தானே!
ஞானத்தின் வாயிலாக தவம்
வரம், இரட்சை ஆகியவற்றை
இரட்சித்துப் பெற்றாலும்
வாழ்க்கை “பூஜ்யம்” தானே!

மலையெனும் சூட்சுமத்தை
மதியெனும் உளியைக் கொண்டு
நிலையெனும் வழியைக் காண
நிகழ்த்தியக் குகையொன்றுக்குள்
அலையெனும் மூச்சடக்கி
அகல்விளக் கென்னும் ஞானக்
கலையெலாங் கற்க, இந்நூல்
காண்பவர், கண்ட மெய்ஞானம்!
போதுவாய் மலர்தல் போலப்
புலமையைப் பெற்றே, கற்க
ஏதுவாய்த் தந்தார், ஞானப்
“ பூஜ்யம் ” எனும் நன்னூலை!
ஓதுவாய் போற்றத்தக்க
ஒப்பில்லாத் திறனைக் கொண்டும்
சாதுவாய் விளங்கும் அன்பர்
மஸானியார் வாழ்க! வாழ்க!

மதிப்புரை

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்பெயரால் தொடங்குகிறேன். மதிப்பிற்குரிய எனது ஞானத்தந்தை "மெஞ்ஞானி " மஸானி அவர்கள் வெளியிடும் " பூஜ்யம் " என்ற கவிதை நூலுக்கு மதிப்புரை வழங்கும்படி என்னைப் பணித்தார்கள். நானும் அக்கவிதை நூலைக் கண்ணுற்றேன்.

இக்கவிதைகள் அனைத்தும் இஸ்லாமியக் கருத்துகளைக் கொண்டவை. தத்துவக் கருத்துக்கள் பொதிந்தவை, மெஞ்ஞானத்தைக் கருவூலமாகக் கொண்டவை என்பதைத் தெளிவுப்படுத்தியிருக்கிறார். நம் மஸானியார் அவர்கள் இஸ்லாம் போற்றும் இல்லற வாழ்விலேயே துறவறம் காணுபவர். இவர் நெல்லை மாவட்டம் கடையநல்லூரில் ஜனாப். சேயன் " கலந்தர் மஸ்தான் சாகிப்", " ஆதலெப்பை முகையத்தீன் பாத்திமா" அவர்களின் புதல்வனாக **1957** ஆம் ஆண்டில் பிறந்தார். மஸானியாரின் இயற்பெயர் "காஜாமுகையதீன் ஆலிம் மஹலரி" என்பதாகும்.

உலகச் சமயங்கள் அனைத்திலும் ஞானத்தின் வழியாக இறை தேடுதல் நடைபெற்று வருகிறது. இத்தேடலை ஆங்கிலத்தில் " மிஸ்டிசம்" என்றும், " அனுபூதி ஞானம் " என்றும் , இஸ்லாமில்,"சூஃபி" என்றும் கூறுவர் அப் பெயர்கொண்ட சூஃபியாகிய மஸானியார்.

" ஆங்காரம் உள்ளடக்கி, ஐம்புலனைச் சுட்டறுத்து,
நித்ய சுகம் பெறும் " ஹிக்மத்" என்னும் சூட்சுமம்."
பெற்ற இறைநேசச் செல்வர்களென்னும் ஒலிமார்களின் ஒளிமிக்க வாழ்க்கையைப் பற்றி நெடுங்காலம் ஆராய்ந்து வருபவர் மஸானியார். மஸானியார்

அந்தக் கால வெளிச்சத்தில்
உன் இலாபத்தை எண்ணிப்பார்!

வாழ்க்கை வியாபாரம் இல்லை
அது வாங்கி வந்த அமானிதம்

அதை ஒப்படைக்க வேண்டாமா?
ஒப்படைக்க வேண்டும்
இதோ "நூஹு"வின் கப்பல்.

பாங்கின் தலைவாசலில்
பரிசுத்த வெளிச்சம்
வெளிச்சத்திற்கு விலாசம்
தேவையில்லை!

நீ இருப்பதோ இருட்டு
கருப்புப் புள்ளிகளைக்கொண்டு
நீ போர்த்திக் கொண்டதால்
நீ அடையாளம் தெரியாமல் ஆனாய்!

இதோ! இருளை விலக்கிய வெளிச்சம்
"நூஹு"வின் கப்பல்
ஏறிக்கொள் பயணி.

இஸ்லாம் அன்பின் எல்லை
அண்ணல் நபியின் மொழி!
அங்கு விரிந்த புத்தகமாய்...!
இறை நெறி காட்டும் மறை

ஆதாரம், ஆதாரம் என்று
ஆர்ப்பரித்துக் கொள்ளாதே!
இறுமாப்புக்காரா....
ஏறிக் கொள்

பயணிக்கத் தயங்காதே
பயணிக்கத் தயங்காதே!
வா! இதோ என் கரம் பற்றிக் கொள்

கப்பல் நிறையுமுன் ஏறிக்கொள்
நான், நீ என்று அடித்துக் கொள்ள
உன்னிடத்தில் என்ன உள்ளது?
வரும்போது
எதைக் கொண்டு வந்தாய்?
உனது கூடு ஜீவனில்லாதது

இதோ "நூஹு"வின் கப்பல்!
ஈமான் கொண்டவர்களைத் தவிர
ஈமான் கொண்டவனே (மறைஉரை)
உன் ஈமான் எங்கே?

அது ஆணவத்திற்கு பக்கத்திலா?
அது ஈமான் இல்லை
அப்படியானால் நீ எப்படி ... !
ஈமான் கொண்டவனாக முடியும்.

கேள்விகளைக் கேட்பவனும்
பதில்களை மறுப்பவனும்
சைத்தானின் பிரதி பிம்பம்
என்பதில் என்ன சந்தேகம்!

இஸ்லாம் ஒரு வெட்ட வெளித்திடல்
பேதங்கள் இல்லாத பெரும் மைதானம்!
அங்கு இதயங்களோடு பேசுவோமா?

இதயம் இருந்தால்
இதோ "நூஹு"வின் கப்பல்

இந்தக் கப்பல்
மதினாவைச் சென்றடையும் போது
கரையை வந்து சேரும்

அவர்களின் ஆத்ம உந்துதல் கொண்டு விளங்கும் " பூஜ்யம் " என்னும் இக்கருத்துக்கருவூலக் கவிதைகள் ஆத்மீக இலக்கியத்திற்கு அணி சேர்க்கும் என்று நம்புகிறேன்.

மஸானியார் அவர்களால் படைக்கப்பட்ட ''பூஜ்யம்'' என்னும் கவிதை நூலில் ஞானச்சிறப்பினையும், பிரபஞ்சத்தில் எல்லா உயிர்களும் அழிவதும், பின்பு உருவாக்கப்படுவதும், மடிவதும் இயல்பு. இதனை எண்ணில் தொடங்கி எண்ணில் முடித்து, வாழ்க்கையின் நிலையாமையினைப் புலப்படுத்தியுள்ளார்.

மெய்ஞானத்தில் பூஜ்யம்

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

என்ற ஔவையார் அருளியவரிகளும், பெருந்தொகை வள்ளுவ பெருமானர் அவர்களின்

"எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டில்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு." **(குறள்:392)**

என்ற வரிகளும் எண்களின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. எண்ணானது மெய்ஞானத்தில்

அதுதான் "அனாதி" அதுதான் "இருட்கோளம்"
அதுதான் "கோலமாம்"

நாம் இருந்த, முதல் நிலையும், பூஜ்யம். தான் ஆசானை, மெய்க்குருவை அடைந்த பின் தான் நாம் தோற்றத்திற்கு வருகிறோம்.

" ஒப்பாகிய நீ பெற்ற உரு பொருளே
முப்பா ழுதுயா ழாகமு ழுந்தே
அப்பால் அது சூனியமாய் உண்டேல்
அப்பா குரு அங்கே வரும் இறைவனே"

என்ற பாடலில் கோலமாம் ஜீவ கோளத்திற்குள் இருந்த மெய்ம்மையாகிய சூனியம் தான் குரு பிரனாக உருவெடுத்து வருகிறார்கள் என்பது விளக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் இதனை "இன்மை" என்றும் பரிபாடலில் "பாழ்" (பரிபா : 2)

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. "பூஜ்யம்" பற்றிய குறிப்பு உலகின் முதல் நூலான "ரிக்" வேதத்திலே உள்ளது.

ஒன்றுமில்லை என்ற சொல்லிற்கு நிறைய சொற்கள் (எல்லாம் இருக்கிறது.)இருக்கிறது என்று பொருள்படும். அதாவது காலியான, பூஜ்யம் (பூச்சியம்) வெறுமை, அவாந்தரம், அளவிட முடியாதது, கணக்கிட முடியாதது, மதிப்பிட முடியாதது சங்கை, கீர்த்தி, சூன்யம், சுத்த சூன்யம், புரை லொஸ்கு, ஆகாசமயம், சுழி, சுன்னம், முதல் எண், ஒன்றுமின்மை, சூன்யப் பிரதேசம், ஒருவருமில்லை, உண்மை திருவுளச்சீட்டு, மதிப்பின்மை, பயனின்மை, இன்மைப்பொருள் உணர்த்தம் சின்னம் (வளைவு) நன்கு மதிப்பு, பகட்டு, வழிப்படதக்கது. நற்பேறின்மை, குற்றமறைக்கு, பாழ்எண், வெற்றிடம்... என பல சொற்களை உள்ளடக்கியது தான் பூஜ்யம்.

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் கவிதையில்,

"பூச்சியத்திற்குள்ளே ஒரு இராச்சியத்தை
ஆண்டு கொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன்
அவனைப் புரிந்து கொண்டால் அவன்தான் இறைவன்"

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இக் காலத்தில் கணினி முறைகளில் சுழியம் (பூஜ்யம்) தான் அடித்தளமாக இருக்கிறது.

பூஜ்யம் தான் மெய்ஞானத்திலும் முக்கியமான இடத்தை வகிக்கின்ற சிறப்பையும் , மகிமையும், பெருமையும் புலப்படுத்தி யுள்ளார்.எல்லா ஞானியர்களும் துறவிகளும் இல்லாமையில் உள்ளமையே உணர்கிறார்கள். அவர்களுள் மஸானியாரும் அடக்கம் பெருவர்.

மேலும் வாழ்க்கையின் தத்துவத்தை வடிவமைத்துக் காட்டியுள்ளார். துவைதம், அத்துவைதம் பற்றி விளக்கியுள்ளார், நேற்று இன்று நாளை என்ற காலத்தின் தொடர் ஓட்டத்தில் வாழ்க்கை நிலையாமையை வலியுறுத்தியுள்ளார். நூஹ¨வின் கப்பலில் பயணத்தை மேற்கொண்டால், அது அறநெறியாகிய இறைவழியில் சென்று நற்பேற்றினை அளிக்கும் (சொர்க்கம்) என்பதை விளக்கியுள்ளார்.

ஒத்துப்போவது அவமானம்
தவறான ஆளின்
பேச்சைக் கேட்பது வஞ்சகம்!

கடந்து போனவர்களைப் பற்றி
நம்பிக்கை இழக்காதே

புறப்பட்டு விட்டது புறப்படு
இல்லையேல் புள்ளியாய் மாறி
இல்லாமல் போய் விடுவாய்!

காலத்தின் மீது சத்தியமாக
மனிதன் நஷ்டத்தில்
இருக்கின்றான்! (மறைபறை)

இஸ்லாமிய அன்பு சகோதரா?

நீ எதிலிருக்கிறாய்?
ஒருமுறை உன்னை ஆய்ந்து பார்
உனது வாழ்வு
நஷ்டத்திலா? லாபத்திலா?

இதோ! புறப்படத் தயாராகி விட்டது
கப்பலில் ஏறிக் கொள்!

அந்தி கறுத்து விட்டது!
பிறவிப் பெருங்கடலில் பாவம்!
உனது வாழ்க்கை குழப்பத்திலும்,
பரிதவிப்பிலும்,
உலர்ந்த சருகாகி விட்டது!

காற்றுக்கு நிகராக பாய்மரமும்,
காலுக்கு நிகராக நங்கூரமும்
புறப்பட்டு விட்டது நூஹ¨வின் கப்பல்

இதோ நூஹு¨வின் கப்பல்
புறப்படத் தயாராக உள்ளது

உன் பயணம் எங்கே?
முடிவு செய்
முடிந்தால் ஏறிக்கொள்

படைப்புக் காலத்தில்
மனித ஆன்மா

இறைவன் தன்னிடமிருந்து
பிரித்தெடுத்த ஒளிரும் தீபம்

இங்கு பயணம் என்பது
கடவுச் சீட்டு

இந்தத் தீபம்
அணையும் முன்
இதோ "நூஹு¨"வின் கப்பல்
பயணி!

இஸ்லாமிய அன்பு சகோதரா?

நாம் ஒருவருக்கொருவர்
சலாம் சொல்லிக்கொள்வோமா ?
சலாம், சத்தியத்தின் தலைப்பிள்ளை

உனது இறப்பு
யாரையும் சபிக்க வேண்டாம்!

வேகமாய்ப் பறக்கும் ஒரு
விடியலை நோக்கி இருக்கட்டும்!

தவறு செய்தவரோடு

**" வித்தைப் போல் மறைந்து
விருட்சம் போல் வெளியாகி
ஞானம்' எனும் பயன் பெறுவாய்"**

எனஞானம் பெற வழி காட்டியுள்ளார். மேலும், பூஜ்யத்தின் மகிமையைப் புலப்படுத்தியுள்ளார்.

எல்லா ஞானியரும், துறவிகளும், சூஃபியாக்களும் ''ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலக ஆசாபாசங்களை விட்டும், ஏக இறைவனுடன் இரண்டறக் கலந்து ஒளி மயமாகிடவே விரும்புகின்றனர்" அவ்வழியில் நம் மஸானியார் அவர்களையும் குறிப்பிட்டுக் கூறலாம். அப்படிப்பட்ட மஸானியார் அவர்களை "மெஞ்ஞானக்குரு" என்று பாராட்டுவதில் நான் பெருமை அடைகிறேன்.

மேலும் மஸானியார் அவர்கள் இது போன்ற மெஞ்ஞானப் பொக்கிஷங்களை, இஸ்லாமிய இலக்கியக் கருவூலங்களை கவிதைகளாகவோ, உரைநடைகளாகவோ வெளிக் கொண்டு வர வேண்டும். அதற்கு இறைவன் அருள் புரிவானாக! ஆமீன்.

இப்படிக்கு
ஓ.மு.சே. அமீர் அம்சா பீவி
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறைத் தலைவர் (மாலை கல்லூரி)தமிழ்த்துறை
நீதிபதி பஷீர் அகமது சயீது பெண்கள் கல்லூரி
(தன்னாட்சி)
தேனாம்பேட்டை, சென்னை 18.

அணிந்துரை :

அளவற்ற அருளாளும் நிகரற்ற அன்புடை யோனுமாகிய எல்லம் வல்ல அல்லாஹ்வின் திருப்பெயரால் தொடங்குகிறேன்.தகவல்-கல்வி-அறிவு-ஞானம். இவை படி நிலைகள்.

1. மரத்திலிருந்து பழம் பழுத்து மண்ணில் விழுகிறது - இது தகவல்
2. ஏன் விழுகிறது என்பது கேள்வி - அதுவே கல்வி
3. புவி ஈர்ப்பு விசையே காரணம் என்பது - அறிவு
4. மண்ணிலிருந்து தோன்றியவை மண்ணுக்கே திரும்பும் என்பதே-ஞானம்.

மதம் என்பதும்,ஆன்மீகம் என்பதும்,வெவ்வேறான புலம் சார்ந்த உணர்வுகள்.ஒன்று நிறுவன மயமாக்கப்பட்டது. பிறிதொன்று எல்லையின்மையை உணரும் பொருட்டு நிறுவன கட்டமைவுகளை மீறுவது.

ஞானவெளியில் நின்று எல்லை இன்மையை உணரும் பொருட்டில் சொல் துணைக் கொண்டு முந்துறும் மஸானியாரின் பயணத்தில் வெளிச்சத்தை உணர்ந்து கொண்ட தவிப்பு மிளிர்கிறது.

“உள்ளம் நிரம்பும்
போது
காதுகள் பேசும்”

என்ற ஞானியின் கருத்து மௌனத்திற்கான பெருவிளக்கமாகும் என்றே கருதுகிறேன்.

“உஜூதே மதுவானதால்
மதுவெல்லாம்
உஜூதானது”.

என்ற “ஒன்றி” இருத்தலே ஞானம் என்கிறார் மசானியார்.

“ஜல் மே கும்ப் கும்ப்மே ஜல்
பாஹர் பீத்ஹர் பானி
ஃபூட்டா கும்ப் ஜல் ஜலஹி
சமானா ஏஹி தத் கஹோ கியானி” -கபீர்தாஸ்.

கொஞ்சம் யோசி

வாழ்க்கை வெறும் கேள்விக்குறி
அல்ல,
அது
ரப்புவின் பதில்

அன்புச் சகோதரா!
இஸ்லாம் எல்லோரையும் நேசிக்கிறது
நீ யாரை நேசிக்கிறாய்?
இஸ்லாம் முரண்படவில்லை
நீ ஏன் முரண்பட்டாய்?
கொஞ்சம்திரும்பிப் பார்?
அந்தத் தடையங்களின்
பசுமையான
நினைவுகளோடு!....

உன் பயணம்
இலக்கை
அடையவில்லையானால்?
நீ எங்கே இருப்பாய்?
நீ சரியான
இடத்தைத் தேடி ஒதுங்கு

இல்லையேல்
உன் நகங்களே
உன் முகத்தைக்
கீறிக் காயப்படுத்தும்
இறை நேசர்களை நீ நேசி
ஏனென்றால்
உன் இரத்த ஓட்டத்தில்
ஷெய்த்தானிய
உயிர் துடிப்பே உள்ளது.
அன்பு சகோதரா!

ஒன்றோடொன்று பின்னிக் கொண்டதால்
உன் பயணம் தடைபட்டு விட்டது

இந்தச் சமத்துவ வெளிச்சத்தில்
உன் கால்களை சரிசெய்து கொள்
இலக்கையும், பயணத்தையும்
முடிவு செய், பின்பு பயணம் செய்

நீ சுமக்கும் அளவிற்கு
கட்டுச் சாதங்களைக்
கட்டிக் கொள் அதுவே
உனக்கு சுமையாகி விட வேண்டாம்

தர்க்கம் என்ற
நொண்டிக் குதிரையில்
பயணம் செய்யாதே
அது உன் இலக்கை
சென்றடையாது.
வேத வெளிச்சத்தில் என்ன
ஆதாரம் தேடுகிறாய்?

வாழ்க்கை நிர்ணயிக்கப்பட்ட பின்பு
எங்கு ஓடுகிறாய்?
அசைவும், ஆக்கமும் உன்னிடம்
கேட்டா நிர்ணயிக்கப்பட்டது.

அப்படி இல்லை என்றால், நீ யார்?
விழிப்பில், உறக்கத்தில்
உன் இயல்புகளைக்
கணக்கிட முடியுமா?
பின்பு ஏன்
மார் தட்டிக் கொள்கிறாய்?

உன் தர்க்கத்தைக் கொஞ்சம் நிறுத்து
சம நிலையில்
சலனமற்று

தண்ணீரை நிரப்பும் பாத்திரத்தின் உள்ளும் புறமும் தண்ணீர் பாத்திரம் உடைந்தால் உள்ளும் புறமும் ஒன்றாகிப் போகும். இதுவே ஞானி கூறும் தத்துவம் என்கிறார் கபீர்தாஸ்.

உயிர்த்தன்மையின் ஒன்றாகிப் போகும் உணர்வு நிலையே ஞானத்தின் வெளி.உடல் கடந்த உணர்வு நிலை என்பது ஆன்மீக ஞானிக்கே சாத்தியமாகிறது. சொல் புரிந்தால் ஞானம் கைகூடலாம்.

"காதலி கடவுளானதால், காதல் போதையானது
காதல் போதையானதால், காணும் பொருள் ஒன்றானது
காணும் பொருள் ஒன்றானதால், காதலி நானானேன்."

,இதுவே சூஃபி தத்துவம் எங்கோ மதக்கோட்பாடுகளில் சிக்கி நாம் இழந்து விட்ட இம்மரபை மீண்டும் உயிர்த்தெழ வைக்கும் "மசானியாரை" நான் நெகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன்.

"ஸஜதா! போதைப் பறவை மதுவில் இல்லாத மயக்கம்
அர்ப்பணத்தில்!"

சமர்ப்பணம் போதை!

"தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

என்பர் அப்பர். முழு சமர்ப்பணத்தைப் போதைப் பறவை என்பதில் ஒளிந்து உள்ள சூட்சுமமே அத்வைதம் ஆகும். ஒன்றாகி, முழுமையாகக் கலந்து விட்டால் பறத்தல் சாத்தியமாகும். இன்னும் இன்னுமாய் விரியும் ஞான வெளிக்கடலாய் இந்நூல் நம் முன் இருக்கிறது. கையளவு அகப்பட்டால் கூட போதுமானதே!

ஞானியர்களை உள்வாங்கும் பெரும் பாக்கியமாய் இந்நூலை (பூஜ்யம்)
அளித்திருக்கும் உயர் திரு. மசானியார் அவர்களை நிரம்ப பாராட்டி மகிழ்கிறேன்.

இவண்

முனைவர் **இ.சா. பர்வீன் சுல்தான்**,
துணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நீதிபதி **பஷீர் அகமது சயீது**
மகளிர் கல்லூரி ,(தன்னாட்சி), தேனாம்பேட்டை,
சென்னை -18.

அணிந்துரை

ஞான ராஜ்யத்தை
ஒரு பூஜ்யத்துக்குள்
அடக்கிய மஸானியாரின்
கவிதைத் தொகுப்பு
படித்தேன்
ஒருபடித்தேன் குடித்தேன்
திகட்ட வில்லை
புள்ளியை வைத்து
பெரும் பூஜ்ய வட்டம்
போட்ட கவிஞர்
அந்தப் புள்ளியும்
சிறு பூஜ்யம்தான்
என்று புரியவைத்துப்
புதிர் களைகிறார்.
காவிரியை கமண்டலத்தில்
அடக்கினார் அடக்கி வைத்திருந்த
சிறிய விதை
இல்லை இல்லை
சிறிய விதைக்குள்ளிருந்து
வெளிப்பட்ட ஆலமரம்
சொல்லிக்கொண்டே
போகலாம்.
பெருங்காப்பியத்தின்

கால்கள் தடுமாறினாலும்
பயணங்கள் தடைபடும்

இரவும், பகலும்
மாறி, மாறி வருவது
உனக்குப் புரியவில்லையா?

நீ நிற்பது
ஒரே இடத்தில் தான்
அவைகள் மாறுகின்றனவா?
நீ மாறுகின்றாயா?

அன்புச் சகோதரா!
மதீனாவின் கண்கள்
திறந்தால் தான்
கஃபாவின் கதவுகள்
திறக்கும்
வெறும் பேச்சு, வெறும் வாதம்
என்ற உச்சரிப்பால்
உன்னைக் கொச்சைப்படுத்திக்
கொள்ளாதே!

கல்வி கர்வத்தின்
தத்துப் பிள்ளையா ?
அப்படியானால்
அந்தக் கல்வி வேண்டாம்
ரப்புவுக்கும், சைத்தானுக்கும் உள்ள
இடைவெளி தெரியுமா?
நெருப்புக்கும், ஜோதிக்கும்
உள்ள இடைவெளியை நீ
எப்போதாவது உணர்ந்தாயா?

உன் கால்கள்

★

உன்னுள் ஏற்படும்
உண்மையை உணரு

நான் என்று பேய் பிடித்தவனே
நீ வெறும் அற்பம்
உன்னைப்
இப் பிரபஞ்சமே
ஏற்காது...

சகோதரா!
உன் ஒட்டகம்
மதினாவை நோக்கிச் செல்லட்டும்

உன் ஒட்டகத்தின் கயிற்றைப்
பற்றிப் பிடித்து
உன் பயணத்தின் தடங்களை
நன்றாகப் பதிவு செய்

சிலருக்கு அது பாதையாக
மாறலாம்

உனக்கு முன்னால் ....!
பயணம் செய்த தடங்கள்
பரிசுத்தமாகவே உள்ளது
அந்தத் தடங்களை மீறாதே!
அன்புச் சகோதரா!
முள்ளில் நீ பயணம் செய்து
உன் கால்களைக்
கிழித்துக் கொள்ளாதே...
கவனி!
மிகக் கவனமாகப் பயணம் செய்.

பாதைகள் மாறினாலும்

ஆரம்பம் ஒரு வார்த்தை

பலகாத துரம் கடக்க

எடுத்து வைப்பது ஒரு அடி

பூஜ்யத்திலிருந்து

ஒன்றை வெளிப்படுத்தினான்.
ஒன்றிற்குப் பின் எத்தனை பூஜ்யம்
போட்டாலும்
எண்ணித் தொலையாத எண்ணிக்கை.
புரியாத பூஜ்ய ராஜன் இறைவனை
ஞானத்தால் புரியவைத்த
ஞானி மஸானி.
வாழ்க!
இறையருள் நீ ள்க.
படைத்தவனைப் பற்றி
பலவான நூல்கள்
படைக்கவென வாழ்த்தும்

அன்புடன்.
தமிழ்மாமணி கவிஞர் அல்ஹாஜ்
இ. முகம்மது அலி
மக்கள் தொடர்பு அதிகாரி (ஓய்வு),
B.S.N.L. திருச்சி

0

பூஜ்யம் ஒன்றானது
ஒன்று பூஜ்யத்தின்
மறுபக்கம்

★

பிரபஞ்சம் பூஜ்யம்
பிரமம் ஒன்று

★

பிரபஞ்சம் பூஜ்யம் ஆகும் போது
பிரம்மம் ஒன்றானது

★

பிரம்மத்தில்
ஒன்றைக் கடந்தால்
பூஜ்யம்

★

பூஜ்யம் ஞானம்
ஞானம் கடந்தால்
ஒன்று

★

பார்ப்பவை ஒன்று
பார்த்தபின் பூஜ்யம்.

★

பூஜ்யத்தை அறிந்தால்
ஒன்று

★

ஒன்றைப் புரிந்தால்
பூஜ்யம்

★

மௌனம் பூஜ்யம்

உன்னைச் சுற்றி நிகழ்வதெல்லாமே
சூனியவர்ணம் தான்!

உன்னுள் சைத்தானை
மலக்கை எப்போதாவது
பார்த்தாயா?
உன்னுள் அவை சூனியமாகவே.

நிரம்பக் குடி, நீராகக் கழி
வயிறு சுமக்கும் அளவிற்கு உண்ணு - !

மலமாக, காற்றாக கழி
நீ உண்டவை, கழித்தவை
எல்லாமே
இப் பிரபஞ்சத்தின் கூட்டுப்
பொருள் தானே
இப் பிரபஞ்சக் கூட்டில்
நீ மலம் சுமக்கும்
மாமிசப் பிண்டமே

அண்டமும், பிண்டமும் வேறு, வேறு
இல்லையப்பா,

உன்னையும் இப்பிரபஞ்சத்தையும்
உணராமல்
நான் என்று மார்தட்டிக் கொள்ள
வெட்கமா இல்லை உனக்கு ... ?
உணரு நன்றாய் உணரு
உன்னை உணரு, இறையை உணரு
இறை நேசர்களை உணரு

நான் இல்லை
நாம் என்பது பூஜ்யத்தின் மடியில்

காற்றில்லாமல் நீ இல்லை
அப்படியானால் நீ காற்றா?

சூரியனும், சந்திரனும் சுழலவில்லை
என்றால்
உன் சுழற்சி இல்லை.

இரண்டும் இல்லையானால் நீ யார்?
நீரில்லாமல் நீ இல்லை
அப்படியானால்
நீ நீரா? நீரில்லையா?

மண்ணா? நீ
இல்லை என்கிறாயா!
மண்ணின் மடியில் நாளை...
நீ இதை எப்போதாவது உணர்ந்தாயா?
உயரு, நன்றாய் உணரு

நானைத் தொலைத்து விட்டு
ஈமானைத் தேடு

தானைத் தொலைத்து விட்டு
தக்வாவைத் தேடு

சூனியம் நிறைந்தது
இப்பிரபஞ்சம் நீயும் தான்

பேசினால் ஒன்று
ஞானி மௌனத்தால்
பூஜ்யம் ஆகிறான்

★

மனிதன் பேசினால்
பூஜ்யம் ஆகிறான்

00

இரண்டு என்பது
பூஜ்யத்தின் இரண்டாம் பக்கம்

★

பூஜ்யம் இல்லையென்றால்
இரண்டும் இல்லை

★

புள்ளியில் துவங்கி
பூஜ்யத்தில் முடிந்தால்
ஒன்றாகும்

★

இரண்டில் துவங்கி
இருப்பதில் முடிந்தால்
பூஜ்யம் ஆகும்

★

வினை ஒன்று
விடியல் இரண்டு

★

பூஜ்யத்தில் ஞானம்
ஒன்று

★

ஞானியைச் சேர்த்து
இரண்டு

★

ஞானியின் பூஜ்யத்தில்
கடவுள் ஒன்று
★
ஞானியின் பூஜ்யத்தில்
கடவுள் ஒன்றானால்
பிரபஞ்சம் இரண்டாகும்.

000

மூன்றின் பார்வையில்
முக்கோணம்
★
ஒரு கோணம்
நேத்திரம் இரண்டு
நினைவு ஒன்று
நிற்பவை மூன்று
கடவுள், ஞானி, மனிதன்
★
பூஜ்யத்தின்
மூன்று பக்கங்களில்
ஞானி நிற்கின்றான்
★
வரவு, செலவு
நிலுவையாக...
★
ஞாலத்தில் எதுவுமில்லை
வெறும் பரவெளி
★
ஞாலத்தின் நினைவு
ஆலத்தின் பூஜ்யம்
★

நான் இல்லை என்று நான் சொன்னால்
மண்ணோடு மணமாவாய்

உணர்....!
இறையை உணர்

இறையை பொறிகளால்
உணர மட்டுமே
முடியும்.

இஸ்லாமிய அன்பு சகோதரா?

இப் பிரபஞ்சத்தில் நீ யார்?
நீ எங்கிருந்தாய் ....!
உன் பயணத்தைத் தொடங்கினாய்
உன் முடிவு எங்கே?
உன் பிறப்பு என்ன பாவமா?
இல்லையானால்
பாவத்தின் பக்கம்
ஏன் உன் சுழற்சி?

மூச்சை நிறைய நிரப்பு
காற்றை விடு.
நீ முடியப் போகிறாய்
முடியப் போகும் முன்
உன்னை அகச்சுத்தி செய்து கொள்

இஸ்லாமிய அன்பு சகோதரா?
நீ
இல்லை

இஸ்லாமிய அன்பு சகோதரா?
நேற்று, இன்று, நாளை என்ற
இப் பிரபஞ்சத்தின் சுழற்சி
ஒன்றிலிருந்து தொடங்கி
ஒன்றிலே முடியும்.

உன் தேகம்
கனவுகளை சுமக்கும்
வெறும் தொட்டிலா?

இறை நினைவுகளைச்
சுமக்கும் தேகக் கட்டிலா?

உன் அந்தப்புரம்
மௌனப் பூக்களால்
மலரட்டும்.

சைத்தான் உன் இரத்தத்தில்
ரப்பு உன் பக்கத்தில்...

இஸ்லாமிய அன்பு சகோதரா?
நீரால் அங்கசுத்தி செய்துகொள்
நினைவால் அகச்சுத்தி செய்துகொள்
கணக்குப் போட்டுக் காதைக்
கடித்துக் கொள்ளாதே!

நீ ஒரு கணக்குக்குள் இருக்கின்றாய்
நான் என்று நீ சொன்னால்
மண்ணோடு மண்ணாவாய்!

பரம்பொருள்
சொல்லில்
பெறும் மாற்றம்
மனிதன்

0000

நான்கோடு வேதம்
நான்கு பூதம்
★
நான்கைக் கொண்டு
நான்கைக் கழித்தால்
பிரம்மம்
★
நான்கைக் கொண்டு சுழித்தால்
நாற்கோணம்
★
நாற்கோணத்தை
அழித்தால் பூஜ்யம்
★
பிறப்பும் இறப்பும்,
பூஜ்யப் புள்ளிகளின்
தொடர் ஓட்டங்களே

ஃஃ

என்பசியின்
தூரம்

பலவீனமல்ல
அனுபவம்

★

என் உறவு முட்கள்
எனக்கு தந்தது
காயமல்ல
கர்ப்பம்

★

கர்ப்பத்தில்
வேதம்
மூச்சு விட்ட போது
என் பிரசன்னம்

★

என்னுள்
பிர் அவன்
இரத்தக் கடலில்
மூழ்கிய போது
ஜீப்ரீல் வந்தார்

★

மௌனக்
கரையில்
இறைவனோடு
பேசினேன்

★

பத்மாசனத்தில்
நாவுகள்
மறைத்ததை
காதுகள் சொன்னது

★

நேற்று
விதைத்ததை

ஆடையற்ற
அந்தப்புரத்தில்
நீயும் நானும்

யா ...!
அல்லாஹ்

நீ
சோதிப்பவர்களுக்கு
சொர்க்கத்தை கொடு ...!
உன்னை
சோதிப்பவர்களுக்கு
நரகத்தை கொடு ...!
எனக்கு
உன்னை
தா....!

சமுதாய காதலால்
காயப்பட்ட – நான் எறிந்த கற்கள்

★

பிரபஞ்சமும், புள்ளியும்
ஒன்றாகும் போது
பூஜ்யம் தனிக்கும்

★

தௌஹீது
இரண்டற்ற ஒன்று
நானில்லா தழிவ தெவ்வாறு
உள்ளமையில் இல்லாமை
திரை விலகிய தரிசனம்.

★

இருட்டு, வெளிச்சம்
சூஃபியின் பயணம்
ரூமிஃயின்
நினைவைப் போல்

★

மனிதன்
யதார்த்தத்தில்
நினைந்து, நனைந்து
இறைவனைத் தொழுதான்

★

நபியின்
நினைவில்.
உன்னைத் தழுவ
நினைத்த நான்
மஜ்னூன்

★

தூய்மையின்
தலைவாசலில்

இன்று நினைத்தேன்
நாளை அறுக்க...

★

மறந்துவிடு
நினைவு வரும்

★

இறந்து விடு
இருக்கலாம்

★

விதைப்பை விடு
விருட்சம் உனக்கு

★

அக்னிக் குஞ்சின்
அகழ்வையில்
தொடங்கித் தொடரும்.

★

உலை மூட்டக்
குளிர்கிறது
பூஜ்யத்தின் வரவாகப்
புனையப்படும்.

★

ஆத்ம சுகங்களை
புறம் தள்ளிவிட்டு
தேகப் புண்களாய்
தினவு செய்கிறது

★

காலத்தின் மறுபக்கத்தில்
படிகள்
பாசி படர்ந்தவை

★

நடக்கின்ற இந்த நாள்
அத்தியாயத்தின்

வெற்றுப் படகாக

ஃ

இல்லாமையின்
உள்ளமை இருப்பு
★
இல்லாமையை உணர்வது
உள்ளமையின் நிஜம்
★
பார்ப்பவன் உண்மை
பார்வை ஆலாபனை
★
ஒன்று உண்மை
மற்றொன்று மயக்கம்
★
காதலி உண்மை
காதலன் நிழல்
★
ஞானம் வழி
உணருதல் உண்மை
★
சூழ்ந்திருப்பவை நிஜம்
உள்ளே சூனியம்
★
அவன் நிஜத்தில்
நீயும் நானும்
பொய்மையில்
★

சடங்குகள் சாயம்
சமர்ப்பணம் ஸஜ்தா

★
உயிரின் உடலில்
உணர்வு தொடங்கும்
அடுக்கடுக்காய் வானம்
வட்ட வடிவமாய் பூமி
தட்டுத் தட்டாய்ப் புகை
பிரபஞ்சம்
புகைந்து, புகைந்து
புனைந்தது.
★
பசுமை சுமக்கும் காடு
பல்கிப் பெருகும்
உயிர்கள்
அழகின் சுகம்
மரண நிழலில்
மாறுபட்ட அலகுகளில்
மனித உறக்கம்
மனமும், ஆன்மாவும்
இல்லாமையின் யதார்த்தம்
மனம் சுற்றும்
ஆன்மா நிற்கும்
மனதை விட
ஆன்மா விரைவானது
★
பூஜ்யத்தில் தொடங்கி பிரம்மம்
புள்ளியில் நிற்கும்
★

புள்ளியோ...
பூஜ்யமாய் மாறி
பிரபஞ்சமாய் விரியும்

முதலில் உயிரா! உடலா!
எதன் தொடக்கத்தில்
எது நிற்கிறது

★

பிரபஞ்ச மேய்ப்பாளன்
சொல் கொண்டு
தட்டினான்
தட்டிய இடமெல்லாம்
துளிர்த்தது.

★

உடலை விட்டு
உயிர் போனால்
“ ஆவி ”

★

உயிர்
உடலை விட்டால்
“ பிணம் ”
உடல்
உயிருடன் இசைந்தால்
பிரபஞ்சமும், மேய்ப்பாளனும்
நேர் கோட்டில்

★

நேற்று உறக்கம்
இன்று விழிப்பு
நாளை மரணம்
நித்திய மௌனத்தில்
நிலைக்கும் விடுதலை.

★

உயிர் நடத்தும் உடலை
மேய்ப்பவன் மேய்த்தான்
மேய்கிறது பிரபஞ்சம்

★

உள்ளே வெளியே
ஒன்றும் இல்லை
உணர்வது மெய்

★

தொழுகை
பரவெளியில்

★

கலப்பற்ற நிலையில்
தான் அழிவது
தன்னை அறிவது

★

காலடி
சந்தேகமானால்
உடனே
நிறுத்தி விடு

★

தடுமாறும்
ஒவ்வொரு இடமும்
புதை குழி

★

உணர்ந்ததை
வெறுப்பதை
பிறரிடம்
திணிக்காதே!

★

பிரபஞ்ச
குழந்தை
தடுமாறும் போது

குன் தான்
தூக்கி நிறுத்தும்

ஈ
மானைக்
குறிபார்த்து
முயல் நின்றது
முயலைக் குறிபார்த்து
முடிவு நின்றது

நிலாக் குடும்பம்
நீந்திச் செல்கிறது
நிச்சயதார்த்த
பூக்களுக்காக

ஃ
மானுட
அசிங்கங்களே
கொஞ்சம் விலகுங்கள்
இவன்
காதல்
தூய்மையானது
★
இருளை அழித்தான்
ஒளி விடையானது
★
தூய்மை காதல்
உதடுகள் மௌனம்
★
உள்ளம்
நிரம்பும் போது
காதுகள் பேசும்

நல்ல மரணம்
★
கால்கள் மேலும், கீழும்
அசைந்தன
விடிந்தது மறு உலகம்
★
விலா எலும்பின் நெருக்கத்தில்
எனக்கு எதிரானது
என் அவயங்கள்
★
சாட்சிகளின் தூண்டில் மீனாய்
உலை கொதித்தது
கண் விழித்தபோது
நினைவோடு நெடுநேரம்.
★

வரண்டுவிட்ட
வயல் வெளி
★
உதிர்ந்து விட்ட
சருகின் ஓசை
★
அணைந்து விட்ட
நெருப்பின் நாதம்
★
உயிரின் துடிப்பும்
உடலின் நடிப்பும்
★
எங்கிருந்து எங்கு
தொடங்கின
★

★

விந்தைப் போல் வெளியாகி
விழுந்துடைந்தால்
“ ஊனம்”

★

இறைவன் பேசினான்
மனிதன் மறைந்தான்
மனிதன் பேசினான்
இறைவன் மறைந்தான்

★

இறைவனின் சொல்லுக்கு அவன்
வார்த்தைகளில் அர்த்தம் தேடினான்

★

வேத வெளிச்சம்
அனர்த்தப் படும்போது
மனிதனின் நிறங்கள்
எங்கே மறைந்தன?

★

மனங்களின் மரணத்தில்
பிணங்களின் வட்டமேசை
சுவர்க்கத்தின் நிஜங்கள்
எங்கே?

★

நான் அடக்கமானேன்
எழுப்பும் போது
விழித்தேன்

★

மண்மேல் சிலர்
பேசிக் கொண்டார்கள்
நல்ல உடல்
நல்ல நேரம்
நல்ல மனிதன்

★

இமை
திறக்கும் போது
இதயம் மூடும்

★

இமை
மூடும்போது
பிரம்ம வெளிச்சம்

★

உள்ளமை
காதலாகி
உள்ளமையில் கலக்க

★

உள்ளமை
ஒன்றானதால்
உள்ளம் காதலானது.

★

காதல்
நினைவால்
கண்ணீர் மதுரம்

★

பிரபஞ்ச விரக்தியினால்
காதல்
முகவரி
தொலைத்தது

★

உள்ளமையும் நானும்
உடல் உள்ளம் போல்

★

காதலின் நினைவில்

உள்ளமை பிரசன்னமாகும்

★

உஜூதின் காதலில்
உஜூதே மதுவானது

★

உஜூதே மதுவானதால்
மதுவெல்லாம்
உஜூதானது

★

மூழ்கினால் மிதக்கலாம்
புரிந்தால் புரியாது
புதிர் புதிதாய்

★

எதிரியின் எச்சில் பட்ட போது
அலி (ரலி) யின்
தணல்
தணிந்தது.

★

ஆதம் ஹவ்வா
ஒருமையால்
நின்ற போது
காதல் மலர்ந்தது

★

இருமையாய்
நினைத்த போது
காமம் எரிந்தது

★

தவ்ஹீதில்
கனிந்த போது
உஜூது ஆடையானது

இன்று இவள்
சரம், சரமாகக்
கிழித்தாள்

தரமும், தாரமும்
கால் வித்தியாசம்
கால வித்தியாசம்
அன்று நீ
சோற்றுக்கு விறகானாய்
இன்று இவள்
சோற்றுக்கு விறகாக்கினாள்

விறகாய் எரிந்ததும்
விரகமாய் அணைந்ததும்
வேறு பாட்டில்
மடிந்தது மனம்

அவள் உடலில்
நான் உயிராக
இவள் உடலில்
வெறும் கூடாக

★

வித்தைப் போல் மறைந்து
விருட்சம் போல் வெளியானால்
“ ஞானம் ”

ஏகம் என்பது எல்லாம்
நான் நீ என்பது வெளிப்பாடு
★
பார்வையைப் பொறுத்து
பார்க்கும் பொருள்
நீரா? நீர்க்குமிழியா?
★
பேருண்மை
அனேக கதை
சூழ்ந்து இருப்பது
துவைதத்திலும்
தானாய்...
★
அந்த மடி
பாசத்தின் நெருக்கம்

இந்த மடி
பாரத்தின் மூர்க்கம்

அந்த மடி
“ தவம் ”, “ ஞானம் ”

இந்த மடி
“ கனம்”, “ சோகம்”
அந்த மடி
இதுவும் பெண்
அதுவும் பெண்
இரப்பவை ஒன்று
கிடைப்பவை வெவ்வேறு
அன்று நீ
தரம், தரமாக
பிரித்தாய்

ஃ

மகனே விடு
விடுதலை பெறு
★
மண்ணில்
பெண்ணில்
சிறைபடாதே!
★
சப்தம் இல்லாத
சங்கீதம்
ஞானமுக்தி
★
வானில் இருந்து
வந்ததை
பூமியில் மறைத்தான்
★
வானின்
கதவு தாழிட
யாசகனாய்
பூமியின்
முதுகில் நடந்தான்
★
இருட்டை
விரட்ட
நெருப்பாய் எரிந்தது
★

திரியாய் உருகி
தீபமாய் ஒளிர்
★
நேசத்தின் நிலை மரணம்

விட்டிலை போல

★

ஒளியை நேசித்ததால்
நெருப்பில் மடிவது
என்ன நியாயம்

★

மூழ்க வேண்டுமா
கடலில் ஆழத்தை
மீன் யோசிக்காது

★

பந்தம் போரின் எச்சம்!
சொந்தம் தோற்றவனின் தினவு...!

★

நேற்று இன்று
நான் இழந்தவை
நான் இழப்பவை
நாளை மீண்டும் ஒரு வரவு

★

காதல் பறவையின் அலகு
காதலி மாதுளையின் ஆடை

★

காதலை தொலைத்துவிட்டு
பிரபஞ்சம்
காலை
மடக்கிக் கொண்டது
கொடுக்கல் வாங்கலில்
காதலால் நிரம்பியது பிரம்மம்

★

காதலன் உதடு பேசும்போது
கடவுள் ரசிப்பான்

★

காதலை அளக்காதே

நீயே நேர்மறை
எறிந்தவனை விட்டுவிட்டு
கல்லைக் கடிக்காதே

★

எல்லாம் அவனென்று
சும்மா இரு

★

காரணங்கள் வெறும்
அலங்காரம்

★

காரியம் காரணத்தின் மூலம்
உன் முயற்சி கடல் உப்பு

★

இருட்டில் உள்ளும்
வெளிச்சத்தின் வெளியும்
அவன் தான்

★

கண்டதும் கேட்டதும்
அவன்தான்

★

காணும் பொருள் யாவும்
கற்பனையே

★

உள்ளும் வெளியும்
அவன் தான்

★

உள்ளது எல்லாம் நிழலே

★

மூலம் விட்டு
விலகி நிற்பது
ஒன்றும் இல்லை

இரவாய் பகலாய்
நேற்றாய் இன்றாய், நாளையாய்
★
நீ என்று
ஏன் நிறுத்தினாய்,
காலத்தை பழித்து
கரும்புள்ளி குத்திக் கொள்ளாதே!
★
கனவு விழித்தால் அது தான்
தெளிவு.
★
காபிர் பார்ப்பதும்
கலிமா பார்ப்பதும்
ஒரு கண் கொண்டுதான்
★

நீ பார்
நெடுதூரம் பார்
பார்வை உன்னிடமே மீளும்
★
மெய்யைப் பார்த்தால் மெய்யை தரிசிப்பாய்
பொய்யைப் பார்த்தால், பொய்மை
தரிசிப்பாய்
★
மெய், பொய் ஆன்மாவின்
இரு பக்கம் தான்
★

ஏகனின்
ரகசியத்தில்
நீயே எதிர்மறை

காதலால் கடல் பிளந்தது
தூர் மலை மயக்கமுற்றது.
★
காதலனும் காதலியும்
வெளியே
காதல் திரை மறைவில்
★

காதுகள் பேசும் போது
உதடுகள் மௌனம்
★
காதுகள் பேசியதை
உதடுகள் ஆட்சேபித்தது
இதயம் ஏற்றது
★
உதடுகளின் உரசலால்
உலகம் ஏமாந்தது
★
இழந்து விட்டதாக
கலங்காதே
இழந்து விடுவதில்
தான் இன்பம்
இருக்கிறது
★
காதலன் தனிக்கும் போது
காதல், காதலி
சப்தம் இல்லாத முத்தம்
★
ஆன்மா கசங்கும் போது
அக்னி திரவம்
கண்களில்
பூக்களை உதிர்க்கும்

★

ஜனனம் நிஜம்
ஆகும் போது
உதிரம் சுவை மாறும்

★

கற்பனை தாண்டிய மௌனமே
நிஜத்தில் கர்ப்பமாகும்
நாட்டம் நடந்து விட்டது

★

ஜிப்ரில் சுமந்ததை
ரசூல் பெற்றார்

★

உஜூதின் திரையில்
தந்தையின் நினைவு
தாயின் கர்ப்பத்தின்
ஆதாரமாகும்

★

வந்தது மணந்தது
மறைந்தது நேற்றைப் போல...

★

ஆதாரம் கால மயக்கத்தின்
சேதாரம்

★

தந்தையாய் மகனாய்
பேரனாய்
மறைந்து மறந்து போனது
மறு யுக ஜனனத்தின் விந்தை

★

பள்ளி பளிங்குக் கற்களாய்
உணவின் இலையாய்
விலையின் விளம்பரத்தில்!

★

★

அவன் வாசலில்
நான் யார் ?
நீ யார்?
நல்லவன், கெட்டவன்
யார்? யார்?

★

ஆத்மாக்கள் தேடும்
அவன்
காலத்தை
கடந்த தூரத்தில்
இல்லை

★

வானில் பற
பூமியில் நட
உன்னை
தனித்தனியாய் உணர்

★

வனப் பயணியே
உன் திசை எங்கே

★

அதை அறிவது
உன் இலக்கு

★

இப்போது ஏறிக் கொள்
அதில் தான் உன் பயணம்
உனக்காகத் தீர்மானிக்கப்பட்டது.

★

முகத்தில் கயிற்றை
கட்டி இழுக்காதே!

★

★

நீ நீயாக நிலைப்பதும் மெய்
நீ என்னில் கலப்பதும் மெய்

★

இருப்பது நீயானால்
எங்கே மாயை

★

இறைவா
நான் உன்னில் மிதக்கின்றேன்
நீ சுமக்கின்றாய்
சுமையின் சுகத்தை
உணருகின்றேன்

★

நெருப்புக்குள் விட்டில் மடிவது
காமமா ? காதலா ?

★

எழுது கோலை
அவன் ஏவினான்

★

அது முஹம்மது
என்று எழுதியது

★

அவன் பிரபஞ்சம் முழுக்க
விதைத்தான்
அது
ஒளியாகப் பரவி
புதுப்புது தோற்றமாயிற்று

ஃஃ

★

நேற்று இன்று நாளை
என்றும்
தொடர் ஓட்டத்தில்...

ஆன்மாவை தொலைத்த
உலகம் அம்மணத்தில்
அரைக்கம்பத்தில்
விற்றுப் போன
விளம்பரப் பலகை

★

நேற்றைய வரலாறு
இற்றுப் போகும்
வீண் பலகைக்கு
ஏன் தகராறு

★

காற்று நின்றது நேற்று
வெற்று வியர்வை
இன்றைய விளிம்பில்

★

மெஹ்ராஜ்
கிரீடத்தை சுமந்து
மீன் பிடிக்கும்
அபலைகள்

★

உஜூதின் சுகத்தை மறந்து
சுய ஆய்வு நடத்தும்
சோம்பல்கள்
வெறும் சடங்குகளை
சொரிந்து சுகம்
காணும் குரங்குகளில்

★

அஸ்ஸலாமு அலைக்க?
நபியை நினைக்க
தர்க்கம் பேசும்
பொய்குறிகள்

★
உன்னை நிறைக்கும்
குட்குடத்தில்
கன்னாஸ்ூம்
கண்ணீரும் கூட கனக்கின்றன.
★

உஜ்ூதின் திரையில்
புள்ளியாய், புதிராய்
புதுப்புது தோற்றமாய்
நிழலாய் நிற்பது நிஜம்
★
மகுடியின் முன்னே
மனம் மயங்கியது
★
ஆன்ம பறவையின்
இறகில் சோகங்கள்
சுவிகாரம்
★
கவிஞனின் நாவில்
கடவுள் பேசுகிறான்
பேசியவுடன் எழுது
★
நான் நினைத்ததை
அவன் சொன்னான்
அவன் நினைத்தது போல்.
★
மரணத்தின் பின்னே
இசைந்தது பூமி
இடியும் போது
ஒன்றும் இராது.

உஜ்ூதுக் கண்ணாடிக்குள்
உலகம் எவ்வளவு
பிரமாண்டம்
★
சூரியன் சூடுபடுமுன்
நீ சுகப்படு
★
அவன் கைவசம் விதி
வயோதிக சீசாவில்
வாலிப மனம்
அடைக்கப்பட்டு
மறுதலிக்கும் மனம்
★

ஒரு கோட்டில்
இரு முனைகள்
★
உள்ளமையில் உண்மை
துவைதமாக
அத்துவைதமாக!
★
மனிதனில் ஈசன்
மறைந்தான்
ஈசனில் எல்லாம்
மறைந்தது
என் இறைவா
என்னுள் நீ
★

என் தேவைகள்
உன்னால்
என்னைக் கொண்டு

பலகீனத்தால் மூடியது

★

கலிமாவை விதைத்தேன்
கடல் சுருங்கியது

★

மகா கெட்டிக்காரன்
வீழ்ந்து கிடந்த
திண்ணையில்
விதி சிரித்தது.

★

மதுக்கோப்பை
காலியான மண்
கலயத்தில்
காய்ந்த சருகாய்
வலியை மறந்தது

★

இடமாற்றம் அல்ல
பயணம்

★

அது நேற்றை
அடைவது

★

கால்கள் நின்றது
பயணம் தொடங்கியது.

★

மேலும் கீழும்
பகலை விரிப்பது
இரவை சுருட்டுவது ஆகும்

★

அவன் புன்னகையில்
துக்கத்தில் நீ

★

★

வா வென்றான்
வந்தேன்
வாழ்க்கை மதிப்பிட முடியா
வரவுக்கும் செலவுக்கும்
நெடுதூர கணக்கு

★

வாங்கியதை கொடுத்துவிட்டு
பூமியின் மடியில் நாம்

★

குழந்தையாய் வந்தேன்
சில பருவ மாற்றங்கள்
குழந்தையாய் திரும்பினேன்

★

உனது பதிவேட்டில்
எனது வரவு நல்வரவு

★

காலை நேரம்
உனது யதார்த்தம்

★

மதிய நேரம் மகிழ்ச்சி

★

அடையும் நேரம்
முதல் ஜாமம்

★

உன் வரவு
இரண்டாம் ஜாமம்

★

உன் நிறைவு
மூன்றாம் ஜாமம்
உன் விடை ?

★

மௌனத்தின்
திரைக் குள்ளே
குன்னின் கோடி

★

என் புலன்களோடு நடந்தேன்
மறந்தது புலன்கள்

★

விடியலின் முன்னே நான் இல்லை
கண்ணைத் திறந்தபோது
நான் தெரிந்தேன்
கண்ணை மூடிய போது
என்னைத் தெரிந்தேன்

★

இறைவனைத் தேடி
என்னைத் தொலைத்தேன்

★

இறைவனின் அருகாமையில்
என்னைப் பார்த்தேன்.

★

நான் உணர்வற்றுக் கிடந்தேன்

★

ஒடுக்கத்தின் நடுவில் உயிர் துடித்தது
அணுக்களாக சுருங்கிய போது தெரிந்தது
நான் எவ்வளவு பெரிதென்று

★

நீ யார் என்று
என்னைக் கேட்டேன்
இறைவன் வெளிப்பட்டான்

★

ஒளியின் திரைக்குப்பின்
எறியப்பட்டு கிடந்தேன்

★

விடியலைத் துடைத்து

விடியும் போது விலகும்
விட்டிலைப் போல

★

அந்தி நரை
வற்றிய அறை

★

கனவுக்குள் சிறைப்பட்ட
மனம் தள்ளாடும்

★

மௌன புன்னகைக்கு
எத்தனை மயில்கள்
வரவுக்கும் செலவுக்கும்
வகை தேட

★

மரணத்தின் படுக்கையில்
ஈரம் சொட்டும் மலர்கள்

★

ஈமான் விதை
அமலின் மகா வெளிச்சம்
யாசகன் தங்கும் போது

★

உமரின் கூடாரம்
புறப்பட்டு விட்டது
மரணத்தின் வலி
சுகம் என்ற பாடலோடு

★

இளமையின்
நறுமணம்
முழுமையின் மூச்சை

★

பாலைவனக் குழந்தையே !
மதுவை தெளி

★

நேற்று குடித்ததால்
இன்று மயக்கம்

★

நரகத்தை சுமந்து
நடந்தேன்

★

மன்னிப்பின் மதிப்பெண்
தெரியாமல்

★

நெற்றியில் நிற்பவை
தந்தையின் சுழிப்பு

★

தாயின் கருப்பையில்
கண் விழித்தேன்

★

காலக் கடையில்
விற்கப்பட்டேன்

★

நினைவு சாம்பல்
எரிந்து தணிந்தது

★

ஆன்ம விதையின் நிழலில்
களைப்பாறியது மரம்.

★

விளக்கிடம் வெளிச்சம்
சிறைப்பட்ட முகம்

★

விடை தேடியது இரவு

★

இரவின் நிர்வாணத்தில்
சூஃபி நிறைந்தான்

★

பகலை பிளந்து
ஆடுகள் மேய்கிறது

★

மதுக் கோப்பை நிரம்ப
குடித்தது நான்
போதை அவனுக்கு

★

இரவில் தேசத்தில்
தாயின் தலத்தில்
ஜீவ அணு
எறி கற்களாய் எறியப்படும்

★

ஒளிக் கண்ணாடி நடுவில்
மோனத் தலையணையில்
தாவிதின் சங்கீதம் நான்

★

தேகத்தை சிதைத்து
தாகத்தின் வெளிச்சத்தில்
தனித்து நின்றது
உயிரின் உசும்பல்

★

விதை நிலத்தில்
மரணப் பற்களில்
புனைவுப் புன்னனை

★

இன்றைய இன்பம்
எல்லாம் கசந்தது
★
ஆதத்தில் ஊதிய
ரீங்காரம் இன்று
வெளிப்பட்டது.
★
புத்தகம் புரண்டது
கண்ணீர்த் திரையில்
மெழுகின் திரியில்
சிறைப்பட்ட தீபமாய்
★
முதுமையின் ஓரத்தில்
பருவக் கனவுகள்
முட்களாய் நினைவெங்கும்
★
கால தடம்
களவுபோனது
பூமி உருண்டதால்
★
ஏகத்துவ இரகசியம்
காதுகளில் கேட்டது
★
மலைகள் சோர்ந்த விஷயத்தில்
இதயம் தோய்ந்தது
★

உலகின் முகமூடி திறந்தது
மரியமின் மடியில்
மழலையின் ஞானம்

தூரத்தில் இல்லை
★
குறைந்த காலம் இது
குடித்த ஆடு
கூடி மூடு
பிறந்த மேனியாய்
இறந்து போ
★
அமுதைத் தெளிக்கும்
அன்னப் பறவையின்
அலகில்
ஒரு புழு இரை
★
கைக் குழந்தை
காலம் களவாடிச்
செல்லும் பொம்மை
★
கொடுக்கின் பிடியில்
கொண்டு
செல்லப்படும் ஏமாளி
★
உன்னை விற்று
என்ன வாங்கினாய் ?
★
புழுவுக்கு நீ
களஞ்சியம் ஆனாய்
★

வெயிலின் வெளிச்சத்தில்
கரைந்து விட்டன
உன் கனவுகள்

படைத்த படைப்பை
தானே ரசிக்க நினைத்த கடவுள்
படைப்புக்குள்
மறைந்தான்

★

காலத்தின்
கதவின் பின்
மரணத்தின் முகவரி
எழுதப்பட்ட களம்
புத்தகச் செய்தியாக
புது பரிணாமம்

★

ஷரிஅத்து பாத்திரம்
விழுந்தவை ஞானம்

★

ஞானத்தின் பிரகாசம்
பாத்திரத்தை
மறைத்த போது
தொழு !

★

ஸஜ்தா !
போதைப் பறவை !
மதுவில் இல்லாத
மயக்கம்
அர்ப்பணத்தில்

★

இரவில் எழு
தொலைத்துவிட்ட
வெளிச்சம்

விஷத்தை முறிந்தது

★

சுஹூதின்
ஹூ சுகத்தில்
மதுவை உமிழ்ந்தான்
தேவ ரகசியம் தெருவில்

★

காலத்திடம் அவகாசம்
கேட்கும் அற்பம்

★

என் மனம்
எங்கு பறக்கும்

★

முகவரி மறு முகவரியை எழுத
நேரம் பார்க்கும்

★

நமன் அடித்த திசை பார்த்து
ஓடும் பந்து போல்
திருப்பி பார்க்கும் இளமை

★

சிதறி விடும் சிறு துளிகள்
எந்த விதைக்காக

★

கதறி அழும்
மரண ஓலம்
எந்த விடுதலைக்காக...

★

இந்த உலகம்
மீண்டும் தோன்றினால்

என் விதி
என் வசம் வேண்டும்

★

பால் வீதி
பருவம் மாயை
உடலின் முடியாமை
நினைவு போதையில்

அவன் விழிப்பில்
நான் உறங்கினேன்
என் உறக்கத்தில்
அவன் விழிப்பு
★
உடல் பசித்தது
மனம் ரசித்தது
★
கோபத்தில் கொதித்து மது
கண்ணீர்
வந்த வழி திரும்பியது
★
மேகத்தை
சுமந்து வந்த தூது
கொஞ்சம்
இறக்கி வைத்தது
இளைப்பாற்ற
★

காற்று
கனல் மழை
திசைமாறியதால்

கடல் இருந்தது
அலை இருந்தது
கரை இல்லை
★
கல்லை உருக்கும் கண்ணீர்
விதியின் கைவசம்
கால விலை இல்லாமல்
கரைகிறது
★
முந்திய எழுத்தின்
முடிவைத் தேடி
பின்வரும் செய்திகள்
திகைக்கிறது
★
பக்தியும், பணிவும்
அர்ஷில் அசையும்
★
விஞ்சையின் முட்கள்
வேறு திசையை நோக்கி
நகரும்.
★
காதலி கடவுளானதால்
காதல் போதையானது
★
காதல் போதையானதால்
காணும் பொருள் ஒன்றானது
★

காணும் பொருள் ஒன்றானதால்
காதலி நானானேன்
★

இருட்டே இருப்பு
★
விதியின் கையில்
உலகம் உருளும்
★
பக்தி, தவம், வரம்
மாறும் பருவம் போல்
கனலாய், காற்றாய்
அலையும் ஆன்மா
★
பொய்மை
போதையின் மயக்கத்தில்
★
முதுகின்
திசை நோக்கி
முகம் இருந்தது
வானிலிருந்தது நெருப்பு
பூமி கொதித்தது
★
எல்லோரின்
மனதையும்
எல்லோரும்
பார்த்தார்கள்
★
உதிர்ந்து போனது
உலகம்
★

இது மாற்று உலகமா ?
மறு உலகமா ?
★

பூமி தலை மாறியது
★
குயவன் மேல் குடியமர்ந்தது
மண்பாண்டம்
★
அப்போது ஓர் தீபக்குப்பி
தீர்க்க தரிசியாய்
கீழ்நோக்கி எரிந்தது
★
வானம் பூமி
ஒன்றும் தெரியா வெளிச்சம்
★
கல்லின் நடுவே
தாவீதின் சங்கீதம்
★
புல்லாங் குழல்
மயக்கத்தில்
★
பிரிந்து விட்ட பிணம்
இறந்து விட்ட பிணத்திடம்
பேசியது
★
வேடனின்
அம்பும், விசையும்
விதிவசம்
★

உள்ளமை போல
ஒன்றிலிருந்து ஒன்று
★
நிதர்சன மேடையில்

நிழல் பொம்மை
★
சுருண்டு விழுந்தது
சோம்பல் வயது
★
வற்றிக் கிடந்த வயிற்றில்
பக்தியின் காப்பு
★
என் தனிமையில்
தென்றல் பிரசவித்தது
முதிர்ந்த நரையின்
பழைய நினைவு
★
இருள் சொன்னது
நானே வெளிச்சம்
★
எதிர் மறையே
எல்லா வற்றிலும்
உண்மை
★
காலடி தடம் ஒன்று
பார்வையற்ற ஆன்மாவை
சுமந்து கொண்டு சொன்னது
★
வெளியைப் பார்க்க எல்லாம்
இருட்டு
★

சுவாசம் சம்பாஷிக்கும்
சப்தம் மட்டும்
காதால் கேட்டன
★

இரவு எங்கே ?
பகல் எங்கே ?
மரணம் எங்கே ?
ஜனனம் எங்கே ?
வியந்தது
காலம் !
இந்த மண்பாண்டம்
காற்றை கொண்டும்
நீரைக் கொண்டும்
ஏன் கரைகிறது
★
நேற்று பழையது
இன்றும் பழையது
நாளையும் பழையது
★
நிர்ணயிக்கப்பட்ட
நினைவுக்கு
என்ன விலை ?
★
யுக முடிவென்பது முடிந்த பின்
தொடக்க மல்ல
★
நூரே
முஹம்மதின்
வெளிச்சத்தில் தெரியும்
என் விலாசம்
★

மண்ணறை குடிமாற்றம்
வாடகை நிர்ணயம்
★
பகலின் மயக்கத்தில்